1993 ஏப்ரல் 21] [திரு. மு. தென்னவன்]

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திசை திருப்புகின்ற வகையிலே புதிய அரசியல் உறவுக்கு அஸ்திவாரமாக, அரசியல் ஆதாயத் திற்காக, அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக, என்னைக் களங்கப்படுத்துகின்ற வகையிலே, நான் சொல்லாத வார்த்தைகளைச் சொல்லிக் களங்கப்படுத்துகிறார் என்பதையும் இங்கே நான் கோடிட்டுக் காட்டி அமைகிறேன்.

8. அவை நிகழ்ச்சிகளைப் பற்றி தவறாகத் தொலைக்காட்சியும் வானொலியும் செய்தி வெளியிடுவது குறித்தும் பேரவைத் தலைவர் அனுமதியின்றி 20—4—1993ஆம் நாளன்று அவைக் குள் தொலைக்காட்சி நிறுவனப் படமெடுப்பவர்கள் நுழைய முயற்சித்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தென்னவன் அவர் கள் தெரிவித்த கருத்தைப்போல, நேற்றைய தினம் அவர் எந்த வகையிலேயும், எவரையும் பற்றிக் குறிப்பிட்டு எந்த வாசகமும் எதுவும் இல்லை. அப்போதே சிலர் குறுக்கிட முற்பட்டபோது அவரே அதைத் தெளிவுபடுத்தி இருக்கிறார். நான் எந்தப் பெய ரையும் உச்சரிக்கவில்லை என்று சொல்லிவிட்டு, அதையும் சொல் லியிருக்கிறார். அவ்வளவுக்கும் பின்னர், வானொலியும், தொலைக் காட்சியும், எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதாக இங்கே திரு. தென்னவன் அவர்கள் சொல்லாத, குறிப்பிடாத ஒரு பெயரை இணைத்து அவர்கள் செய்தி வெளியிட்டு இருப்பது என்பது மிகவும் கண்டிப்பதற்குரிய சம்பவம் ஆகும். அத்தகைய கண் டிப்பதற்குரிய செயலைச் செய்தி நிறுவனங்கள் செய்யாது இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, வானொலியும், தொலைக்காட்சியும் பெரும்பகுதி மக்கள் கேட்கிற, பார்க்கிற, நிறுவனங்களாக இருக்கின்ற காரணத்தால் இந்த பேரவையிலேயும் [அவைகளின் சார்பில் இங்கே செய்தி சேகரிக்க வந்திருக்கிறவர்கள் இருக்கிறார்கள். இன் னொரு உறுப்பினர் ஒரு கருத்தை வெளியிலே போய்ச் சொல் லியிருந்தாலும், நீங்கள் இங்கே, காதாரக் கேட்டிருக்கிறீர்கள் நடந்த சம்பவம் இதுதான் என்றாவது சொல்லி இருக்க வேண்டும் அதையும் விடுத்து, இப்படிப்பட்ட ஒரு செய்தி இங்கே பேசப் பட்டது என்பது போலத் தோற்றத்தைக் கொடுக்க, செய்தி நிறுவனங்கள், குறிப்பாக, தொலைக்காட்சியும், வானொலியும் நேற்றைய தினம் முயன்று இருப்பது கண்டிக்கத்தக்கதாகும். இதைப்போன்ற செயல்களில் வானொலியும், தொலைக்காட்சி யும் ஈடுபடலாகாது. அது இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும், ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையுடைய அமைப்பு என்பதை மறந்து விடலாகாது. யாருக்கோ சிலருக்குக் குத்தகை விடப்பட்ட அமைப்புக்கள் அல்ல என்பதையும் அவர்கள் உணர்ந்து செய்தியை வெளியிட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

386 அவை நிகழ்ச்சிகளைப்பற்றி தவறாகத் தொலைக் காட்சியும் வானொலியும் செய்தி வெளியிடுவது குறித்தும் பேரவைத் தலைவர் அனுமதியின்றி 20-4-1993 ஆம் நாளன்று அவைக்குள் தொலைக்காட்சி நிறுவனப் படமெடுப்புவர்கள் நுழைய முயற்சித்தது குறித்து.

[பேரவைத் தலைவர்] [1993 ஏப்ரல் 21

இன்னொரு சம்பவம். இந்தப் பேரவைக்குள், செய்தியாளர்கள் என்னுடைய அனுமதியின் பேரில் வருகிறார்கள். செய்தி சேகரிக்கிறார்கள். இந்த வளாகத்தில் எங்கு வேண்டுமானாலும் அவர்கள் செல்லலாம் என்கிற அனுமதி அவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. வருகின்றார்கள். செய்தி சேகரிக்கின்றார்கள், செல்கின்றார்கள். நேற்று இரவு 9-45 மணிக்குத் தொலைக் காட்சியினர் தங்களுடைய கேமிராக்களை எடுத்துக்கொண்டு, என்னுடைய அனுமதி எதுவும் பெறாமல் இங்கே உள்ளே வந்து படம் எடுப்பதற்கு முயற்சித்து, இங்கே இருக்கிற 4 ஆம் நம்பர் வாயில் வழியாக, மூடப்பட்டிருந்த அந்த ''கேட்டையும்'' தள்ளி விட்டு உள்ளே நுழைவதற்கு முயற்சித்து இருக்கிறார்கள். காவல் துறையினர் அவர்களை அகற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வரம்பு மீறிய செயலில், என்னுடைய அனுமதி எதுவும் பெறாமல், வீடியோ கேமிராக்களோடு உள்ளே நுழைய முற்படுவதற்கு அவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள் என்பதையும் இந்த நேரத்திலே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-55

அப்படி வரம்பு மீறிய செயல்களில் சில நாட்களாக தொலைக் காட்சியினரும், வானொலியினரும், ஈடுபட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. பேரவையின் உரிமை மீறல் பிரச்சினையாகவே இதை எழுப்பலாம் என்று இருந்தேன். இருந்தாலும் இந்தப் பிரச்சினைக்குப் பின்னராவது இது போன்ற முயற்சிகளில் ஈடுபடமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். நேற்றைய தினம் வரம்புமீறி அந்தக் கேமராக்காரர்கள் உள்ளே நுழைய முற்பட்ட போது, காங்கிரஸ் கட்சியினுடைய முக்கியத் தலைவர்களில் ஒருவராக இருக்கிற அனந்தநாயகி அம்மையார், கூட வந்திருந்தார்கள். அவரும் உள்ளே நுழைய முற்பட்டிருக்கிறார்கள் நான் வருகிறேன் வாருங்கள் என்று அவர்களை அழைத்துக்கொண்டு, அப்படியானால் யாருடைய தூண்டுதலில், யாருடைய கட்டளையில், இங்கே இருக்கின்ற தொலைக்காட்சியினர் செயல்படுகிறார்கள் என்பதற்கு அந்தச் சம்பவமே சான்றாகும். எனவே, இதைப் போன்ற வரம்பு மீறிய காரியங்களில் தொலைக்காட்சியினர் ஈடுபட்டு வருவது பற்றிய இந்தக் குறிப்பு மத்திய அரசுக்கும் அனுப்பி வைக்கப்படும். இது போன்ற வரம்பு மீறிய செயல்களில் தொலைக்காட்சியினர் ஈடுபடாமல் இருப்பது நல்லது என்கிற எச்சரிக்கையோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிடலாம் என்று நான் கருதுகிறேன்.

1993-94ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடு) திரு. தா. வேடியப்பன்.

*திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நேற்றைய்தினம் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்களை பேசிய வார்த்தை கூட எந்த ஒரு வானொலி, டி.வி. நிகழ்ச்சியிலும் இடம் பெறவில்லை. அந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் சொன்னார் என்பது மட்டும் விளம்பரப்படுத்தப் பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதற்கு வானொலி நிலையத்திற்கும், தொலைக்காட்சி நிலையத்திற்கும் கண்டனம் தெரிவிக்க வேண்டுமென்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே சொல்லிவிட்டேன். கொஞ்ச நாட்களாக எந்தக் கட்டளையில் செயல்படுகிறார்கள் என்று தெரியவில்லை. வரம்புமீறிச் செயல்படுகிறார்கள். பேரவைத் தலைவரை ஒருமையில் பேசிய காரணத்தினால்தான், திருநாவுக்கரசை நேற்று வெளியேற்றினார் என்கிற செய்தியைச் சொல்வதற்கு அவர்களுக்கு மனமில்லை. அதைக்கூட திருத்தித்தான் சொன்னார்கள். அவர் தொடர்ந்து பேச வேண்டுமென்று வற்புறுத்தினார், வற்புறுத்திக் கொண்டேயிருந்தார், பேரவைத் தலைவர் உட்காருமாறு கேட்டுக் கொண்டார், அவர் உட்காராத காரணத்தால், வெளியேற்றினார் என்று தான் செய்தியைச் சொன்னார்கள். ஒருமையில் பேசிய காரணத்தினால், பேரவைத் தலைவரை இப்படி இழிவுபடுத்திப் பேசியது சரியா என்று இங்கே இருக்கின்ற தலைவர்களையெல்லாம் கேட்டுவிட்டுத் தான் வெளியேற்றினேன். ஆகவே தான் அந்த நேரத்தில் வேறு எந்தத் தலைவரும் நான் தெரிவித்த அந்தக் கருத்துக்கு மறுப்பே தெரிவிக்க முடியவில்லை. அவரை வெளியேற்றுகின்றபோது ஏற்பட்ட சம்பவம் என்பது கண்டிக்கத்தக்கது என்று நான் திரும்பத் திரும்பச் சொன்னேன். இன்றைக்கும் சொல்கிறேன் கண்டிக்கத்தக்கது என்று. அவர்களையும் நான் திரும்பத் திரும்பக் கேட்டேன். நான் கண்டிக்கிறேன் என்றே திரும்பத் திரும்பச் சொன்னேன். அவ்வாறு கண்டிக்கிறேன் என்று சொன்னதற்குப் பிறகு, இன்னார்தான் அவரைக் குறிப்பிட்டுக் கண்டியுங்கள் என்று சொல்லியிருந்தால் குறிப்பிட்டுக் கண்டித்திருப்பேன். அவர்களும் இன்னார்தான் என்று சொல்ல முடியவில்லை, எனக்கும் தெரியாது, மாண்புமிகு முதல் அமைச்சரும், அவை முன்னவர் அவர்களும், இந்தத் திசையை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள். அவர்களுக்கும் தெரியாது. அப்படி இருக்கிறபோது, இன்னார்தான் என்று எப்படி நான் நேற்று கண்டித்திருக்க முடியும். பொதுவாக அந்தக் குரல் வந்ததைக் கண்டிக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். அதிலேயே எல்லாம் அடங்கிவிடுகிறது. அதற்குப் பிறகு நீங்கள் கண்டிக்கிறீர்களே அவர் இன்னார்தான் என்கிற பிரச்சினை வருமேயானால் உரிமைப் பிரச்சினையாகக் கூட கொண்டுவந்திருக்கலாம். அதைவிடுத்து இவ்வளவு சம்பவங்களையும் நேற்று நடத்தினார்கள்.

 அவை நிகழ்ச்சிகளைப் பற்றி தவறாகத் தொலைக்காட்சியும், வானொலியும் செய்தி வெளியிடுவது குறித்தும் பேரவைத் தலைவர் அனுமதியின்றி 20–4–93 ஆம் நாளன்று அவைக்குள் தொலைக்காட்சி நிறுவனப் படமெடுப்பவர்கள் நுழைய முயற்சித்தது குறித்தும்.

அடிப்படையில் பேரவைத் தலைவரை ஒருமையில் பேசிய அந்தச் சம்பவத்தைச் சுட்டிக்காட்டாமல், வானொலியினரும், தொலைக் காட்சியினரும் விட்டுவிட்டார்கள் என்பது நான் ஏற்கெனவே சொல்லியதிலிருந்தே பேரவைக்குப் புரியும். அவர்கள் இப்படித் தான் கொஞ்ச நாட்களாக நடந்து வருகிறார்கள். அதுவும் கண் டிக்கத்தக்கது என்கிற வகையிலே இப்போதைக்கு விட்டுவிடலாம் என்று நினைக்கிறேன். திரு. ஆர். முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் திருநாவுக்கரசு அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறபோது ஒரு சில வார்த்தைகளால் சில குழப்பங்கள் ஏற்பட்டது. அந்த நேரத்தில் திருநாவுக்கரசு அவர் கள் சொன்ன வார்த்தை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். இன் னும் மோசமாக பேசினார் என்று வேண்டுமானால் இருக்கலாம். அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம். அது வேண்டாம், டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

நன்பகல் 12–00

7. தாம் தன்னிலை விளக்கம்—தொடர்ச்சி.

(ஆ) பேசாததைப் பேசியதாக "இந்து" நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது குறித்து ஓர் உறுப்பினரின் தன்னிலை விளக்கம்

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : பேரவைத் தலைவர் அவர் களே, இன்றைய "இந்து" நாளிதழில் * * என்று சொன்னது நான்தான் என்று அதாவது இவர் சொன்னார் என்று போடப்பட்டிருக்கிறது. மிகவும் பிற்பட்ட சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த என்னை வேண்டும் என்றே இந்து நாளிதழ் இப்படியாக என் பெயரைப் போட்டு, என்னுடைய பெயரை வேண்டுமென்றே இழுத்து இருக்கிறது என்பதையும், களங்கம் கற்பிக்கும் வகையில் என்னுடைய பெயரை, மிகவும் பிற்பட்ட சிறுபான்மை கிறிஸ்தவ பிரதிநிதியாக விளங்குகிற என்னை, .மிக உயர்ந்த இடத்திலே இருக்கிற இந்துபத்திரிகை என்னை இப்படி இழிவுபடுத்தும் வகையில், என்னுடைய பெயரைக்களங்கப்படுத்து கிற வகையில் வெளியிட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். நான் சொல்லாத வார்த்தையை, நான் செய்யாத தவறை வேண்டுமென்றே என் மீது இட்டுக்கட்டி போடப்பட்டிருக்கிற இந்தச் செய்திக்கு, எனது உரிமையைப் பறிக்கிற இந்தச் செய்திக்கு தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.